**செய்தி வெளியீடு எண்:076** **நாள்: 08.02.2017**

# செய்தி வெளியீடு

அறிவியல் நகரம், உயர்கல்வித்துறை பத்தாவது முறையாக சென்னை அறிவியல் விழாவினை ''நீடித்த நீர் மேலாண்மையும், வேளாண்மையும்'' என்ற தலைப்பில் பிப்ரவரி 9 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை நடத்த உள்ளது. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் கே. பி. அன்பழகன் அவர்கள் இவ்விழாவினை 9.2.2017 அன்று துவக்கி வைப்பார்.

துவக்க விழாவினில் கீழ்க்காணும் முக்கிய விருதுகளையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் வழங்கி கவுரவிப்பார்.

1. தமிழ்நாடு வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது
2. தமிழ்நாடு இளம் விஞ்ஞானி விருது மற்றும்
3. பள்ளி சிறார் அறிவியல் விருது

சென்னை அறிவியல் விழாவினில் பிரமாண்ட அறிவியல் கண்காட்சி முக்கிய அங்கம் வகிக்கும். இதனுடன் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மட்டுமல்லாமல் முதன்முறையாக தமிழ்நாடு முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் தங்களது கண்டுப்பிடிப்புகளை காட்சிப் பொருளாக வைக்க உள்ளனர். அறிவியல் கண்காட்சி மட்டுமல்லாமல் விரிவுரையும், குழு கலந்துரையாடலும் பிப்ரவரி 10 மற்றும் 11ஆம் தேதி ''நீடித்த நீர் மேலாண்மையும், வேளாண்மையும்'' என்ற தலைப்பில் நடக்கவுள்ளது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**